1544

[App]roved by the Madras Text-Book C[om]mittee For class use.
[(Fort St.] George Gazette, Part 1-B, Page 545 dated 20th November 1934)

# தமிழ்க் கனி வாசகம்

## முதற் புத்தகம்

# A Rational Tamil Primer

**Comprising the principle of Syllabification**

ம. பெரியசாமிப் பிள்ளை
இயற்றியது

சேக்கிழார் தமிழகம்
[மேலச்]சிந்தாமணி : : தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி
1935

[விலை அணு $2\frac{1}{2}$

TB
031(1)
N35
88602

# தமிழ்க் கனி வாசகம்

## முதற் புத்தகம்

திருச்சிராப்பள்ளி
E. R. ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
இயற்றியது

சேக்கிழார் தமிழகம்
மேலச்சிந்தாமணி, தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி
1935

பதிப்புரிமை]

[விலை அணா 2½

# முன்னுரை

அகர வுயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து.

அகரம் முதல எழுத்தெல்லாம் என்பது பொய்யாமொழி. நாம் வாய்திறந்து வேறு முயற்சியின்றி ஒரு ஓசையை மட்டும் உண்டாக்குவோமாயின் அவ்வோசையால் ஆகும் எழுத்து 'அ' என்பதே. இன்னும், பிள்ளைகள் இளம்பருவத்தில் வளைகோடுகள் (Curved lines) எழுதுதற்கே பெரிதும் விரும்புகின்றனர். இத்தகைய இயல்புகளாற்றான் 'அ' என்பது எழுத்துக்களில் முதலதாகக் கொள்ளப்பட்டுத் தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. ஆதலின், இத் தமிழ்க் கனி வாசகம் முதற் புத்தகத்தில் அகரம் முதலாக எழுத்துக்கள் தொடங்கப் பெற்றுள.

இளம்பிள்ளைகள் படம் பார்ப்பதில் மிகுந்த விருப்பம் உடையவர்களாதலின் இப்புத்தகத்தில் ஒவ்வொரு பாடமும் படத்தைக் கொண்டே தொடங்கப் பெறுகிறது. ஒவ்வொரு படத்திலும் காட்டப்பட்டுள்ள பொருள்கள் ஆசிரியர் பிள்ளைகளோடு சம்பாஷித்தற்குரிய முறையில் அமைந்துள்ளன. இப்புத்தகத்தில் வந்துள்ள சொற்களெல்லாம் மாணவருக்குப் பழக்கமானவையும் மிக எளிதில் விளக்கக்கூடியவையும் ஆகும். புதிதாகக் கற்பிக்கப்படும் எழுத்துக்கள் செந்நிறத்தில் காட்டப்பட்டுள. சுவை பயக்கும் பொருட்டுச் சொற்கள் மோனை எதுகை நயம்படத்தரப் பெற்றுள்ளன.

அசைகளைக் (Syllables) கொண்டு சொற்களை ஆக்குதல் சிறந்த முறையாதலின், முதலில் ஓரசைச் சொற்களும் பின்னர் முறையே ஈரசை மூவசைச் சொற்களும் பயிற்சிகளில் கொடுக்கப் பெற்றுள. இன்னும், அசை அசையாகக் கூட்டிச் சொற்களை உண்டாக்கினல் சொல்லாக்கத்தில் பிழை ஏற்படாதாகலின் அம்முறை பற்றிச் சொற்கள் வேண்டிய அளவு அசை பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

இப்புத்தகம் ஐந்து பகுதியாக அமைந்துள்ளது. வேண்டிய இடங்களில் பயிற்சிகள் முறை முறையாகக் கொடுக்கப் பெற்றுள.

முதற் பகுதியில், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஆய்த எழுத்தும் கற்பிக்கப்படுகின்றன. அகரம் முதலிய உயிரெழுத்துக்களை

எழுதுதற்கு வட்டம் அரைவட்டம் கிடந்தகோடு நின்றகோடு இவைகள் உதவியாகும். ஆதலின், ஒவ்வொரு பாடத்தின் அடியி-லும் அதில் கற்பிக்கப்படும் எழுத்து எழுதப்படுங்கால் தோன்றும் பல படிகளும் (Stages) தனித்தனியே காட்டப்பட்டுள.

இரண்டாம் பகுதியில், உயிரேறிய மெய்யெழுத்தை முன்ன-தாகக் கொண்டு மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் போதிக்கப்படு-கின்றன. இதில் 'ங' என்பதற்கு மணியோசையைக் குறிக்கும் பட-மும் 'ஞ' என்பதற்கு பூனை கத்தும் ஓசையைக் குறிக்கும் படமும் எளிமையும் இனிமையும் பற்றித் தரப்பெற்றுள.

மூன்றும் பகுதியில், உயிர்மெய் யெழுத்துக்கள் கற்பிக்கப்படு-கின்றன. இதில் ஒவ்வொரு பாடத்திலும் உள்ள படத்தின் கீழ் அது பற்றிய எளிய வாக்கியங்களும், அவற்றின் பிறகு, கற்பிக்-கப்படும் எழுத்துக்களின் பயிற்சிக்காகப் பல சொற்களும் முறை முறையாக அமைந்துள்ளன.

நான்காம் பகுதியில், படம் பார்த்துப் படித்தல் (Picture Reading) என்னும் முறைபற்றி, ஒவ்வொரு படத்தின் எதிரிலும் காட்டப்பட்ட சொற்களைக்கொண்டு அவ்வப் படத்தைப்பற்றி வாக்கியம் அமைக்குமாறு பல சித்திரங்கள் தரப் பெற்றுள. இவை இளைஞர்களுக்குக் கிளர்ச்சியையும் உற்சாகத்தையும் உண்டாக்கும்.

ஐந்தாம் பகுதியில், தொடக்கத்தில் சில பாடங்கள் எளிய வாக்-கியங்களால் அமைந்தவை. பின்னர், இரண்டு பாடம் மும்மூன்று சிறு பாராக்களால் அமைந்துள்ளன; பிள்ளைகளின் மனோபாவத்திற் கேற்பக் கிளிப்பாட்டும் ஒரு உரையாடற் பாடமும் (dialogue) தரப் பெற்றுள்ளன. இவற்றோடு சில நீதி வாக்கியங்களும் வாழ்த்-துப் பாட்டும் வந்துள.

பிள்ளைகளுக்கு எழுத்துக்களும் சொல்லாக்கமும் வாக்கிய அமைப்பும் எளிய இனிய முறையில் நன்கு பயிற்றப்படல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு, நீண்டநாட் சிந்தனையின் பயனாக, இத் தமிழ்க் கனி வாசகம் முதற் புத்தகத்தை இயற்றியுள்ளேன். ஆகலின், இது இளைஞர்கட்குப் பெரிதும் பயன்படுமென்று எண்ணுகின்றேன்.

சேக்கிழார் தமிழகம்
மேலைச்சிந்தாமணி
30—8—1934.

ம. பெரியசாமிப் பிள்ளை.

# தமிழ்க் கனி வாசகம்

## முதற் புத்தகம்



அம்மா அப்பம் அடுப்பு

அரிசி அவல் அணில்



# அ

ஆல் ஆடு ஆள்

ஆணி ஆமை ஆப்பம்

| | | |
|---|---|---|
| அ | ஆ | ஆ |

ஆ



இடையன் இட்டிலி இலை

இஞ்சி இடுப்பு இறகு



# இ



ஈஞ்சு (பழம்) ஈ ஈசல்

ஈட்டி ஈரம் ஈயம்



# ஈ



உரல் உலக்கை உமி

உப்பு உறி உடம்பு

ം ൭ ൨ உ

# உ

ஊ ஞ்சல்    ஊ சி    ஊ து

ஊ மை    ஊ ட்டு    ஊ ர்



# ஊ



எருமை எருது எலி

எள்ளு எண்ணெய் எறும்பு



# எ



ஏற்றம் ஏழை ஏர்

ஏணி ஏடு ஏப்பம்

எ ஏ

ஏ



ஐயர் ஐயங்கார் ஐவர்

ஐப்பசி ஐந்து (விரல்) ஐயா

| | | | | |
|---|---|---|---|---|
| ൭ | ൭ர | ஐ | ஐ | ஐ |

ஐ



ஒட்டகம் ஒட்டன் ஒருவன்

ஒட்டரை ஒன்பது ஒழுகல்

ஒ



ஓ ணா ன்    ஓ டு

ஓ லை    ஓ ம ம்

ொ ோ

# ஓ



ஔவை ஔடதம்

ஔ

ஔ



எ ஃ கு

இ ஃ து

அ ஃ து

அ ஃ கம்

ஃ

பயிற்சி

| | | |
|---|---|---|
| அ - ஆ | இ - ஈ | உ - ஊ |
| எ - ஏ | ஐ | ஒ - ஓ |
| | ஔ | |

அ இ உ எ ஒ

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

இ ஐ ஆ உ ஏ ஈ

ஒ ஊ அ எ ஓ ஔ

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

| | | | |
|---|---|---|---|
| | |  | |
| கலயம் | க | ஙண ஙண | ங |
|  | |  | |
| சக்கரம் | க் | மாங்காய் | ங் |
| க் க | | ங் ங | |

| | | | |
|---|---|---|---|
| சட்டி | ச | ஞா ஞா | ஞ |
| தச்சன் | ச் |  மஞ்சள் | ஞ் |
| ச் ச | | ஞ் ஞ | |

குடம் ட



கிணறு ண



கட்டில் ட்

வண்டு ண்

ட் ட

ண் ண

| | | | |
|---|---|---|---|
| | | | |
| த வ ளை | த | ந ண் டு | ந |
|  | |  | |
| வா த் து | த் | ப ந் து | ந் |

| | |
|---|---|
| த் த | ந் ந |



ப சு ப



ம யில் ம



காப் பு ப்

ம ரம் ம்

ப் ப

ம் ம

| | | | |
|---|---|---|---|
| <br>யானை | ய | <br>உரல் | ர |
| <br>நாய் | ய் | <br>எர் | ர் |
| ய் ய | | ர் ர | |

| | | | |
|---|---|---|---|
| கலசம் | லி |  வண்டி | வ |
| அணில் | ல் | அவ்வை | வ் |
| ல் ல | | வ் வ | |

ப ழ ம்　　ழ

கு ள ம்　　ள



சி மி ழ்　　ழ்



தே ள்　　ள்

ழ்　ழ　　ள்　ள

| | | | |
|---|---|---|---|
| <br>மு ற ம் | ற | <br>கூ ன ன் | ன |
| <br>நா ற் கா லி | ற் | <br>ப ன் றி | ன் |
| ற் ற | | ன் ன | |

பயிற்சி—1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ப | வ | ல | ட | த |
| க | ஞ | ம | ள | ன | ற |
| ங | ண | ந | ழ | ய | ர |
| க | ச | ட | த | ப | ற |
| ங | ஞ | ண | ந | ம | ன |
| ய | ர | ல | வ | ழ | ள |
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

## பயிற்சி—2

| | | | |
|---|---|---|---|
| கற | பட பட | கண் | ஆள் |
| பற | மட மட | மண் | ஆல் |
| நட | கல கல | எண் | ஆண் |
| கட | நட நட | கல் | ஊண் |
| பல | பல பல | பல் | ஊர் |
| கல | சள சள | மல் | ஏர் |
| இர | வழ வழ | எள் | ஊன் |
| இற | சர சர | கள் | ஈன் |

## பயிற்சி—3

| | | |
|---|---|---|
| படல் | மணல் | மனம் |
| மடல் | தணல் | கனம் |
| படம் | நகம் | இடம் |
| வடம் | அகம் | தடம் |
| மரம் | அகல் | அறம் |
| அரம் | பகல் | மறம் |
| பணம் | அவள் | உடல் |
| மணம் | அவல் | கடல் |

## பயிற்சி—4

| | | |
|---|---|---|
| ஆ-டல் | பட்-டம் | ஆப்-பம் |
| ஆ-ரம் | சட்-டம் | ஏப்-பம் |
| ஈ-ரம் | கள்-ளன் | ஆட்-டம் |
| ஈ-சல் | பள்-ளம் | ஓட்-டம் |
| ஊ-சல் | தச்-சன் | ஊட்-டல் |
| ஊ-தல் | சத்-தம் | ஓட்-டல் |
| ஏ-லம் | கம்-மல் | ஆய்-தல் |
| ஓ-மம் | தங்-கம் | ஓய்-தல் |
| கவ-னம் | தகப்-பன் | மத்-தளம் |
| கல-யம் | பதக்-கம் | பந்-தயம் |
| கட-யம் | கலக்-கம் | பம்-பரம் |
| நக-ரம் | மயக்-கம் | சந்-தனம் |
| தக-ரம் | பழக்-கம் | நல்-லவர் |
| பவ-ளம் | நடத்-தல் | அப்-பளம் |

அண்-ணன் படம்

ஆ-லம் பழம்

இல-வ மரம்

ஈச்-சம் பழம்

உரல் ஓ-ரம்

ஊஞ்-சல் ஆட்-டம்

எங்-கள் இடம்

ஏற்-ற மரம்

ஐ-வர் வந்-தனர்

ஒட்-டகம் உய-ரம்

ஓ-தல் நலம்

அ

க
ங
ச
ஞ
ட
ண
த
ந
ப
ம
ய
ர
ல
வ
ழ
ள
ற
ன



# க ட க ம்

க் + அ = க

இந்-தக் கட-கம் தங்-கம்.

தங்-கக் கட-கம் நல்-ல கட-கம்.

கடகம் வட்-டம்; உய-ரம் அல்-ல.

| | |
|---|---|
| கண் | கப்-பல் |
| பண் | அப்-பன் |
| வயல் | அர-சன் |
| அயல் | கல-சம் |
| இடம் | மண்-டபம் |
| வடம் | பந்-தயம் |

# ஆ

கா
ஙா
சா
ஞா
டா
ணா
தா
நா
பா
மா
யா
ரா
லா
வா
ழா
ளா
றா
னா

ா ா

கா ணா

றா

னா

# கா ல்

க் + ஆ = கா

இந்-தக் கால் கந்-தன் கால்.
கந்-தன் கால்-கள் உய-ரம்.
நாம் கால்-களால் நடக்-கலாம்.

| | |
|---|---|
| நாய் | கா-லணா |
| வாய் | மா-மனார் |
| பால் | வண்-ணான் |
| வால் | கன்-னான் |
| பா-டம் | பலாக்-காய் |
| மா-டம் | நிலா-நாள் |

இ

கி
ஙி
சி
ஞி
டி
ணி
தி
நி
பி
மி
யி
ரி
லி
வி
ழி
ளி
றி
னி

ெ ி

கி டி

# கிளி

க் + இ = கி

கிளி பழம் தின்-கிற-து.
கிளி அழ-கா-ன பட்-சி.
சிலர் கிளி வளர்ப்-பார்.

| | |
|---|---|
| மணி | அரி-சி |
| பிணி | விசி-றி |
| படி | பரி-சல் |
| வடி | கரி-சல் |
| தயிர் | மின்-னல் |
| பயிர் | பின்-னல் |
| ஆ-ணி | சித்-திரம் |
| கா-ணி | சத்-திரம் |

ஈ

கீ
ஙீ
சீ
ஞீ
டீ
ணீ
தீ
நீ
பீ
மீ
யீ
ரீ
லீ
வீ
ழீ
ளீ
றீ
னீ

ீ

கீ

# கீரி

க் + ஈ = கீ

கீ-ரி நல்-ல பிரா-ணி.
கீ-ரியின் பல் நீள-ம்.
இந்-தக் கீ-ரி தீ-னி தின்-கிற-து.

| | |
|---|---|
| நீர் | நீ-லம் |
| சீர் | சீ-லம் |
| வீ-தி | தண்-ணீர் |
| மீ-தி | கண்-ணீர் |
| கீ-றல் | பன்-னீர் |
| சீ-றல் | சீ-ரகம் |
| தீ-ரன் | கீ-சகன் |
| வீ-ரன் | பீ-ரங்-கி |

உ

கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு

ு | ு | ு

கு ஙு ஞு

டு சு ணு

மு பு து

**கு** ர ங் கு

க் + உ = **கு**

குரங்-கு மரத்-தில் வசிக்-கும்.
குரங்-கின் வால் மிக-வும் நீ-ளம்.
இந்தக் குரங்கு பழம் தின்-கின்-றது.

| | |
|---|---|
| அது | பருப்-பு |
| இது | கறுப்-பு |
| ஆ-டு | அரும்-பு |
| கா-டு | எறும்-பு |
| நண்-டு | பருந்-து |
| வண்-டு | விருந்-து |

| ஊ |
| --- |
| கூ |
| ஙூ |
| சூ |
| ஞூ |
| டூ |
| ணூ |
| தூ |
| நூ |
| பூ |
| மூ |
| யூ |
| ரூ |
| லூ |
| வூ |
| ழூ |
| ளூ |
| றூ |
| னூ |



ஙூ டூ ஞூ

யூ மூ ணூ

பூ ரூ தூ

கூ சூ

## கூடு

க் + ஊ = கூ

இது பட்-சிக் கூ-டு.
பட்-சிகள் நன்-றாய்க் கூடு கட்டும்.
இந்தக் கூட்-டில் குஞ்-சுகள்; பார்.

| | |
| --- | --- |
| தூண் | கூட்-டு |
| பூண் | பூட்-டு |
| தூ-சி | கூட்-டம் |
| ஊ-சி | மூட்-டம் |
| கூ-டம் | குண்-டூசி |
| சூ-டம் | பூ-வர-சு |

| எ |
|---|
| கெ |
| ஙெ |
| செ |
| ஞெ |
| டெ |
| ணெ |
| தெ |
| நெ |
| பெ |
| மெ |
| யெ |
| ரெ |
| லெ |
| வெ |
| ழெ |
| ளெ |
| றெ |
| னெ |

ெ

கெ

# கெண்டி

க் + எ = கெ

இந்தக் கெண்-டி வெண்-கலம்.
வெண்-கலக் கெண்-டி அழ-கு உள்-ளது.
இதற்-குப் பெரி-ய மூக்-கு உண்-டு.
கெண்-டியில் பால் ஊற்-றிக் குடிக்-கலாம்.

| | |
|---|---|
| நெல் | எண்-ணெய் |
| செல் | வெண்-ணெய் |
| செடி | வெல்-லம் |
| வெடி | வெள்-ளம் |
| செண்-டு | சுண்-டெலி |
| பெண்-டு | வெண்-மதி |

ஏ

கே
ஙே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே



ே

கே

# கே ணி

க் + ஏ = கே

இது நல்-ல கேணி.

இதற்-குச் சுவர் உண்டு.

கே-ணியில் தண்-ணீர் ஊறும்.

ஊற்-றுத் தண்-ணீர் நல்ல தண்ணீர்.

| | |
|---|---|
| தேன் | சே-வகன் |
| பேன் | கே-சவன் |
| பேச்-சு | சே-ணியன் |
| ஏச்-சு | வே-ணியன் |
| மே-ளம் | சிநே-கம் |
| சே-லம் | அநே-கம் |

ஐ

கை
ஙை
சை
ஞை
டை
ணை
தை
நை
பை
மை
யை
ரை
லை
வை
ழை
ளை
றை
னை



ை ெ
கை ணை
லை
ளை
னை

# கைகள்

க் + ஐ = கை

இந்தக் கை-கள் கண்-ணன் கை-கள்.
கை-யில் விரல்-கள் உண்டு.
இரண்-டு கை-களில் எத்-தனை விரல்கள்?
கைகள் வே-லை செய்-ய உத-வும்.

| | |
|---|---|
| இலை | தென்-னை |
| மலை | பெண்-ணை |
| யா-னை | எரு-மை |
| பா-னை | பெரு-மை |
| கீ-ரை | வைத்-தியன் |
| கூ-ரை | பைத்-தியன் |

| ஒ |
| --- |
| கொ |
| ஙொ |
| சொ |
| ஞொ |
| டொ |
| ணொ |
| தொ |
| நொ |
| பொ |
| மொ |
| யொ |
| ரொ |
| லொ |
| வொ |
| ழொ |
| ளொ |
| றொ |
| னொ |

ொ ெ

கொ ணொ

றொ

னொ

# கொக்கு

க் + ஒ = கொ

கொக்-கு ஒரு பற-வை.
கொக்-கின் இற-கு வெண்-மை.
அதன் கால் உய-ரம்; அல-கு நீ-ளம்.
கொக்கு மீ-னைப் பிடித்-துத் தின்-னும்.

| | |
| --- | --- |
| நொய் | கொண்-டை |
| பொய் | தொண்-டை |
| கொடி | தொட்-டில் |
| நொடி | கொட்-டம் |
| மொட்-டு | கொப்-புளம் |
| கொட்-டு | மொட்-டுகள் |

ஓ

கோ
ஙோ
சோ
ஞோ
டோ
ணோ
தோ
நோ
போ
மோ
யோ
ரோ
லோ
வோ
ழோ
ளோ
றோ
னோ



ே ா

கோ ணோ
றோ
னோ

# கோழி

க் + ஓ = கோ

இந்தக் கோ-ழி பெட்-டைக் கோ-ழி.

ஆண் கோழி சே-வல்; பெண் கோழி பெட்-டை.

பெட்டைக் கோழி முட்-டை இடும்.

கோழிக் குஞ்-சுகள் மேய்-கின்-றன; பார்.

| | |
|---|---|
| கோல் | தோண்-டி |
| தோல் | தோட்-டி |
| கோ-டு | பெற்-றோர் |
| போ-டு | கற்-றோர் |
| சோ-ளம் | மோ-திரம் |
| கோ-லம் | யோக்-கியன் |

# ஔ

கௌ
ஙௌ
சௌ
ஞௌ
டௌ
ணௌ
தௌ
நௌ
பௌ
மௌ
யௌ
ரௌ
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ



ெ ள

ெ க ள

## கௌ தாரி

க் + ஔ =கௌ

இந்தப் பற-வை கௌ-தா-ரி.
கௌ-தா-ரி சாம்-பல் நிறம்.
கௌ தாரி தவிட்-டைத் தின்-னும்.
அது வீட்-டில் வளர்க்-கக் கூ-டிய-து.

ஔ - வை
கௌ - ளி
வௌ - வால்
மௌ - னம்
கௌ - சலை
சௌக் - கியம்

## பயிற்சி 1

| | | | |
|---|---|---|---|
| பூ | பொன் | மீன் | எடு |
| தீ | மண் | ஊன் | கொடு |
| நீ | கல் | ஊர் | படு |
| போ | நெல் | பார் | நடு |
| வா | வில் | நீர் | நதி |
| தா | சொல் | மோர் | வதி |

## பயிற்சி 2

| | | |
|---|---|---|
| கலம் | பா-லம் | ஓ-ணன் |
| பலம் | தா-ளம் | கா-ணன் |
| கதர் | கோ-ணல் | கோ-ணன் |
| பதர் | நா-ணல் | போ-ணன் |
| திடல் | ஈ-ரம் | தா-யார் |
| படல் | ஓ-ரம் | சீ-மான் |
| மதில் | நா-ணம் | ஓ-நாய் |
| செதில் | வா-ணம் | பூ-ரான் |

| | | |
|---|---|---|
| தச்-சன் | பொங்-கல் | படித்-தான் |
| பட்-டம் | கொஞ்-சம் | எடுத்-தான் |
| பொத்-தல் | சொந்-தம் | கணக்-கன் |
| வற்-றல் | வம்-பன் | மரக்-கால் |
| வட்-டம் | தின்-றல் | கடுக்-கன் |

பயிற்சி—3

| | |
|---|---|
| பணக்-கா-ரன் | ஓ-டக்-கோல் |
| நடுப்-பிள்-ளை | மாங்-கொட்-டை |
| நிலக்-கட-லை | பூந்-தொட்-டி |
| மரத்-தட்-டு | வேப்-பம்-பூ |
| புதுத்-துண்-டு | பூங்-கொத்-து |
| பசுக்-கன்-று | மாம்-பட்-டை |
| வா-ழைக்-காய் | மான்-கன்-று |
| தா-ழம்-பூ | கத்-தரிக்-காய் |
| வே-டிக்-கை | வெள்-ளரிப்-பழம் |
| கோ-ணிப்-பை | கத்-தரிக்-கோல் |
| ஏ-லக்-காய் | முந்-திரிக்-கொடி |

## பயிற்சி—4

| | |
|---|---|
| காலை நேரம் | கந்தைத் துணி |
| பழைய சோறு | வெள்ளிக் கிண்ணி |
| தென்னை மரம் | கன்றுக் குட்டி |
| தேங்காய் ஓடு | தாமரை இலை |
| கோவில் யானை | புதன் கிழமை |
| குதிரை வண்டி | மண் தோண்டி |
| வேட்டை நாய் | காட்டுப் பூனை |
| கனிந்த பழம் | காவேரி ஆறு |
| கருங் குரங்கு | மாதுளஞ் செடி |
| தெப்பக் குளம் | எலுமிச்சங் காய் |
| ஆட்டு மந்தை | ஆரஞ்சுப் பழம் |
| அவரைக் கொடி | நல்ல சிநேகிதன் |

## பயிற்சி—6

அணில் பழம் தின்னும்.

ஆடு தழை மேயும்.

இடையன் பால் விற்பான்.

ஈசல் புற்றில் இருந்து கிளம்பும்.

உலக்கை மரத்தினால் செய்யப்படும்.

ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்லும்.

எருமைக் கடா உழுவதற்கு உதவும்.

ஏணியில் பல படிகள் உண்டு.

ஐயம் இடுதல் அனைவருக்கும் உரியது.

ஒட்டகம் ஒரு விகாரமான மிருகம்.

ஓடம் ஆற்றைக் கடக்க உதவும்.

ஔவை நன்றாய்ப் படித்த கிழவி.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள் | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |



கூஜா

ஸீஸா

# ஜ ஸ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ |

| | | |
|---|---|---|
| புஸ்தகம் | பக்ஷணம் | ரோஜா ஹாரம் |
| ஜனங்கள் | ஜீரணம் | புஷ்பச் செடி |
| விருக்ஷம் | அவஸ்தை | முஹூர்த்த நாள் |
| ரிஷபம் | கஷாயம் | விஷப் பாம்பு |
| துஷ்டன் | திராக்ஷை | தமிழ்ப் பாஷை |

புஷ்பம்       ஹாரம்

ஷ       ஹ

ஜெ ஜே ஜை ஜொ ஜோ ஜௌ ஜ்

ஸெ ஸே ஸை ஸொ ஸோ ஸௌ ஸ்

ஷெ ஷே ஷை ஷொ ஷோ ஷௌ ஷ்

ஹெ ஹே ஹை ஹொ ஹோ ஹௌ ஹ்

க்ஷெ க்ஷே க்ஷை க்ஷொ க்ஷோ க்ஷௌ க்ஷ்

வெள்ளிக் கூஜா விலை உயர்ந்தது.

ஒருவகை மணலால் ஸீஸா செய்கிறார்கள்.

புஷ்ப ஹாரம் என்பது பூமாலை.

பக்ஷிகள் இறக்கைகளால் பறக்கின்றன.

நமது பாஷை தமிழ்ப் பாஷை.

| | |
|---|---|
| | மாடு —— குடிக்கிறது. |
|  | பூனை —— பிடிக்கிறது. |
| | இடையன்——கறக்கிறான். |
| | இடைச்சி——கடைகிறாள். |
| | தச்சன் —— செய்கிறான். |
|  | மாடு —— தின்கிறது. |

| | |
|---|---|
| | ——— ——— கடிக்கிறது. |
|  | ——— ——— சுமக்கிறது. |
| | ——— ——— தின்கிறது. |
| | ——— ——— வெளுக்கிறான். |
| | ——— ——— தைக்கிறான். |
| | ——— ——— வெட்டுகிறான். |

| | |
|---|---|
| | ——— ——— வனைகிறான். |
| | ——— ——— உழுகிறான். |
|  | ——— ——— நெய்கிறான். |
| | ——— ——— செய்கிறான். |
| | ——— ——— சமைக்கிறாள். |



# 1. நமது அரசர்.

1. இவர் நமது அரசர்.

2. நமது அரசர் பெயர் ஐந்தாம்-ஜார்ஜ்.

3. இவர் இங்கிலந்து தேசத்தில் வசிக்கிறார்.

4. நாம் வசிக்கும் தேசம் இந்தியா.

5. இந்தியாவை அரசருக்காக ஆள்பவர் வைசிராய்.

6. நமது அரசர் நம்மிடத்தில் அன்பாய் இருக்கிறார்.

7. நாமும் அவரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும்.



## 2. பசு

1. இது ஒரு பசு.
2. பசு சாதுவான மிருகம்.
3. பசுவின் பால் உடம்புக்கு நல்லது.
4. பசுவைப் பாலுக்காக வீட்டில் வளர்க்கிறார்கள்.
5. பசுவிற்குப் புல்லும் வைக்கோலும் ஆகாரம்.
6. பசு கழுநீர் குடிக்கும்; தண்ணீரும் பருகும்.
7. பசு ஒரு தடவைக்கு ஒரு கன்று போடும்.
8. ஆண் கன்றுக்குக் காளை என்று பெயர்.
9. பெண் கன்றுக்குக் கடாரி என்று பெயர்.
10. பசுவின் குளம்பு பிளவுபட்டு இருக்கும்.



## 3. குதிரை

1. இது ஒரு குதிரை.
2. குதிரை வேகமாய் ஓடக் கூடியது.
3. குதிரைக்குப் புல்லும் கொள்ளும் உணவு.
4. குதிரை வண்டி இழுக்க உதவும்.
5. சிலர் குதிரைமேல் ஏறிச் சவாரி செய்வார்கள்.
6. குதிரைக்குக் கழுத்தில் நீண்ட மயிர் உண்டு.
7. அதன் வால் மயிரும் நீளமாக இருக்கும்.
8. குதிரையின் குளம்பு பிளவு படாமல் இருக்கும்.
9. குதிரை குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் மிருகம்.
10. குதிரைக் குட்டி பார்வைக்கு அழகாய் இருக்கும்.

## 4. வாழை மரம்

1. இது ஒரு வாழை மரம்.

2. இதில் வாழைக்குலை தொங்குகிறது; பார்.

3. வாழைக் குலைக்குத் தாறு என்றும் பெயர்.

4. வாழைப்பூ சீப்புப்போல அடுக்காய் இருக்கும்.

5. அதனால் வாழைக்காயும் சீப்புச்சீப்பாய்க் காய்க்கும்.

6. வாழைப் பூவையும் காயையும் சமைக்கலாம்.

7. வாழைப் பழத்தைத் தின்னலாம்.

8. வாழை இலையில் அன்னம் இட்டுச் சாப்பிடலாம்.

9. மரத்தின் அடியில் உள்ளவை வாழைக் கன்று.

10. கன்று வளர்ந்தால் மரம் ஆகும்.



## 5. காக்கை

1. காக்கை என்பது ஒரு பக்ஷி. பக்ஷி பறக்கும்; அதனால் பக்ஷிக்குப் பறவை என்றும் பெயர். காக்கை கருமை நிறமுள்ள பறவை.

2. அது மரங்களில் கூடு கட்டி அதில் வசிக்கும். காக்கை முட்டை இட்டுக் குஞ்சு பொறிக்கும். அது பூச்சி, புழு, நெல், சோறு, அழுகிய மாமிசம் இவைகளைத் தின்னும்.

3. காக்கை விடியற் காலையில் எழுந்து கா-கா-கா என்று கத்தும். ஒரு காக்கைக்குத் தீனி கிடைத்தால் அது மற்றக் காகங்களையும் அழைத்து அவைகளுடன் உண்ணும். அது தினமும் மாலையில் தனது உடலைச் சுத்தம் செய்துகொள்ளும்.

# 6. நன்மாணுக்கன்

1. இவன் பெயர் கந்தன். கந்தன் மிகவும் நல்ல பையன். இவன் பள்ளிக்கூடம் போகிருன்.

2. கந்தன் அதிகாலேயில் எழுந்திருப்பான்; காலேக் கடன்களே முடித்துக் கடவுளே வணங்குவான். பிறகு, தன் பாடங்களேச் செவ்வையாகப் படிப்பான்; வீட்டில் உள்ள உணவை உண்பான் ; காலம் தவருமல் பள்ளிக்கூடம் செல்வான்.

3. இவன் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் சொல்வதைக் கவனமாகக் கேட்பான். அவர் கேட்கும் கேள்விக்குத் தகுந்த பதில் கூறுவான்; தெரியாவிட்டால் அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்வான். அதனல், உபாத்தியாயருக்கு அவன் மேல் அதிக அன்பு உண்டு. நீயும் கந்தனேப் போல நல்ல மாணவனுக இருக்க வேண்டும்.



# 7. கிளிப் பாட்டு

1. பச்சைக்கிளி வெள்ளைக்கிளி
   பாங்காகப் பேசுங்கிளி
   நிச்சயமாய் என்னுடனே
   நேசம் மிகக் கொள்ளுங்கிளி.
2. சிவப்புக்கிளி கருப்புக்கிளி
   சிங்கார மானகிளி
   உவப்பாகச் சொன்னதையே
   ஓயாமல் சொல்லுங்கிளி.
3. கொஞ்சுங்கிளி குலவுங்கிளி
   கூசாமல் பேசுங்கிளி
   பஞ்சவர்ண முள்ளகிளி
   பார்ப்போர்கண் கவருங்கிளி.
4. அலகுகளால் கனியதனை
   ஆராய்ந்து கொத்துங்கிளி
   பலமான கொட்டைகளைப்
   பாங்காக உடைக்குங்கிளி
5. பாலும் பழமும் வைத்து
   பரிவுடனே மாதர்களும்
   நாளும் வளர்க்குங்கிளி
   நானுரைக்கும் பச்சைக்கிளி.



# ৪. மயில்

கண்ணன்:—அண்ணு, இது என்ன? இவ்வளவு அழகாய் இருக்கிறது!

அண்ணன்:—தம்பீ, இது தெரியாதா? இது தான் மயில்.

கண்ணன்:—சரி, அது என்ன! அதன் வாலில் அவ்வளவு பெரிய விசிறி இருக்கிறது!

அண்ணன்:—தம்பீ, அது விசிறி அல்ல; தோகை.

கண்ணன்:—தோகை என்ருல் என்ன?

அண்ணன்:—மயில் ஒரு பறவை அல்லவா? அதன் வாலின் இறகுகள் நீளமாய் இருக்கும். அதனுல், அவைகளுக்குத் தோகை என்று பெயர்.

கண்ணன்:—தோகையில் கூட கண்கள் உண்டா?

அண்ணன்:—தம்பீ, அவைகள் கண்களா? அல்ல; அழகான புள்ளிகள். ஆனுல் அவைகள் பார்வைக்குக் கண்போல இருக்கும். அவைகளால் மயில் பார்க்க முடியாது.

கண்ணன்:—அண்ணு, அண்ணு; இப்பொழுது பார்; தோகை சுருங்குகிறது.

அண்ணன்:—ஆமாம்; தம்பீ, மயிலின் தோகை எப்பொழுதும் விரிந்து இருக்காது. மயில் தனக்கு மகிழ்ச்சி உண்டாகும்போது தோகையை விரித்து ஆடும். பிறகு சுருக்கிக் கொள்ளும்.

கண்ணன்:—சரிதான் அண்ணு! இது நல்ல வேடிக்கை.

---

## 9. நல்லொழுக்க விதிகள்

1. காலையில் எழுந்திரு.
2. கடவுளை வணங்கு.
3. தினமும் குளி.
4. சுத்த ஆடை கட்டு.
5. பெற்றோர் சொற்கேள்.
6. வேளையில் உண்.
7. கல்வியை விரும்பு.
8. குருமொழி கொள்.
9. மிதமாய் விளையாடு.
10. உண்மையே பேசு.
11. நல்லோர் சினேகம் செய்.

2312

# வாழ்த்துப் பாட்டு

1. எங்கள் நாடாம் இந்தி யாவும்
எழிலு டனே வாழ்கவே
எங்கள் ஐந்தாம் ஜார்ஜு மன்னன்
இன்ப மாக வாழ்கவே.

TB
031(1)
N35

2. கற்ற வரும் செல்வ ருந்தாம்
கலந்து நன்கு வாழ்கவே
மற்ற வரும் இன்பு டனே
மகிழ்ந்து நாளும் வாழ்கவே.

3. தாய்மொ ழியாம் "தமிழ்க் கனி"யும்
தழைத் தினிதே வாழ்கவே
தூய்மை யாக அதனைப் போற்றும்
தொண்டர் களும் வாழ்கவே.

THE B. N. PRESS, EDUCTIONL PRINTERS, MADRAS.

| | | உச்சரி |
|---|---|---|
| 1 | க | ஒன்று |
| 2 | உ | இரண்டு |
| 3 | ங | மூன்று |
| 4 | ச | நான்கு |
| 5 | ரு | ஐந்து |
| 6 | சா | ஆறு |
| 7 | எ | ஏழு |
| 8 | அ | எட்டு |
| 9 | கூ | ஒன்பது |
| 10 | ய | பத்து |
| 11 | யக | பதினொன்று |
| 12 | யஉ | பன்னிரண்டு |
| 13 | யங | பதின்மூன்று |
| 14 | யச | பதினான்கு |
| 15 | யரு | பதினைந்து |
| 16 | யசா | பதினாறு |
| 17 | யஎ | பதினேழு |
| 18 | யஅ | பதினெட்டு |
| 19 | யகூ | பத்தொன்பது |
| 20 | உய | இருபது |

கிழமை 4. பு[illegible]

கிழமை 5. வியாழக் கிழமை

யக் கிழமை 6. வெள்ளிக் கிழமை

7. சனிக் கிழமை

ஏழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம்

## மாதங்கள்

| தமிழ் மாதங்கள். | இங்கிலீஷ் மாதங்கள். |
|---|---|
| சித்திரை | ஜனவரி |
| வைகாசி | பிப்ரவரி |
| ஆனி | மார்ச்சு |
| ஆடி | ஏப்ரல் |
| ஆவணி | மே |
| புரட்டாசி | ஜூன் |
| ஐப்பசி | ஜூலை |
| கார்த்திகை | ஆகஸ்டு |
| மார்கழி | செப்டம்பர் |
| தை | அக்டோபர் |
| மாசி | நவம்பர் |
| பங்குனி | டிசம்பர் |

பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு வருஷம்.